மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 105/2022**

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ஆம் தேதி வெள்ளிக்கிழமை

வா.சா.1 (கருப்பசாமி)

கு.வி (4ம் பிரதிவாதி தரப்பில்)

இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள புல எண் 130 ராக்கம்மாளுக்கு பாத்தியபபட்டது. அதன் விஸதீரணம் 1 ஏக்கர் 12 செண்ட் ஆகும். அந்த சொத்து ராக்கமாளுக்கு எப்படி கிடைத்தது என்றால் அவரது அப்பா வழி பூர்வீக சொத்து. அந்த சொத்துகளை ராக்கமாள் அவரது மகள்களுக்கு தான் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புல எண் 130 அதன் விஸதீரணம் 1ஏக்கர் 12 செண்ட் என்பது தவறு என்றால் சரியல்ல. 1ம் லக்க சொத்தாக கண்டுள்ள சொத்தில் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்றால் 9 சொத்துக்கள் உள்ளது. 1ம் லக்க சொத்தில் 1ம் வரிசையாக கண்டுள்ள சொத்து தான் புல எண் 130 என்றால் சரிதான். அது எவ்வளவு செண்ட் என்று சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1 1/2 ஏக்கர் என்று குறிப்பிட்டுள்ளேன். 1 1/2 ஏக்கரும் ராக்கம்மாளுக்கும் மருதாயியிக்கும் மட்டும் பாத்தியமில்லை அவருடன் சேர்ந்த பெரும் பங்காளிகளுக்கும் பாத்தியம் என்றால் சரியல்ல. நான் புலஎண் 130க்கான வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். புலஎண் 130க்கு பட்டா ராக்கம்மாள் பெயரில் மட்டும் தான் உள்ளது. தற்பொழுது அழகிச்சி, கருப்பசாமி ஆகியோர் பட்டாவை அவர்கள் பெயரில் மாற்றி உள்ளார்கள். அழகிச்சி, கருப்பசாமி பெயரில் உள்ள பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். புல எண் 130ல் எனது தகப்பனாருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. புலஎண் 130 சொத்து மருதாயி, ராக்கமாளுக்கு பாத்தியமாக இருந்து அதில் மருதாயிக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்து அதையும் 1ம் லக்க சொத்தில் 2 முதல் 7 இலக்க சொத்துக்களையும் சேர்த்து 18.11.1989 வழக்கின் 2, 4 பிரதிவாதிகளுக்கு மருதாயி பதிவு ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் அது பொய்யான ஆவணம். புலஎண் 130க்கு பட்டா எண் தெரியாது. அதைபோல

1 லக்க சொத்தில் வரிசை எண் 2 முதல் 7 ஆக கண்டுள்ள சொத்துக்களுக்கு பட்டா எண் என்ன, அது யார் பெயரில் உள்ளது என்றால் பட்டா எண் ஞாபகம் இல்லை. ராக்கம்மாள் பெயரில் உள்ளது. மேற்படி ராக்கம்மாள் பெயரில் உள்ள பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1வது லக்க சொத்தில் வரிசை எண் 7 ஆக கண்டுள்ள சொத்து சர்வே எண் 126/4 அந்த சொத்து பெரும் பங்காளி பாண்டி என்பவருக்கும் பாத்தியமுள்ளது என்றால் அவருக்கு உரிமை இல்லை. சர்வே எண் 126/4ல் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு செய்துள்ளேன் என்றால் 37 செண்ட்க்கு தாக்கல் செய்துள்ளேன். அதில் மொத்த சொத்தில் கட்டுப்பட்ட 23 ஏக்கரில் கட்டுப்பட்டுள்ளது என்று சொத்து விபரத்தில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 23 ஏக்கர் பல நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, 5 நபர்களுக்கு பாத்தியப்பட்டது. இந்த சொத்தில் உரிமையுடைய பாண்டி என்பவருக்கு மொத்தம் உள்ள 23 ஏக்கரில் சரிபாதி பாண்டிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. கருப்பையா மகன் பாண்டி என்பவர் எனது தகப்பனாருக்கு பங்காளி என்றால் சரியல்ல. 1 ம் லக்கத்தில் 2ம் லக்கம் சொத்தாக வரிசை எண் 1 ஆக கண்டுள்ள புலஎண் 189/6சி1 அந்த சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதற்கான பட்டா எண்ணும் ஞாபகம் இல்லை. அந்த சொத்துக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ராக்கம்மாள் பெயரில் உள்ளது. பட்டா ராக்கம்மாள் பெயரில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் புலஎண் 189/6சி1 பட்டா எண் 517 எனது அப்பா அழகர், இந்த வழக்கின் 2, 4 பிரதிவாதிகள் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரியல்ல. புலஎண் 189/6சி1 சொத்தின் பெயர் பாறைக்குளம் நஞ்சை என்றால் சரிதான். அதில் உட்பிரிவு செய்து தனிபட்டா பெறுவதற்கு அழகிச்சி நடவடிக்கை செய்துள்ளார் என்றால் சரியல்ல. 12.04.1988ல் எனது அப்பா அழகர். அழகிச்சி, கருப்பசாமி மூவருக்கு இடையில் பாகப்பிரிவினை நடந்து பாகவிஸ்தி எழுதி கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாறைக்குளம் நஞ்சையை அழகர், அழகிச்சி, கருப்பசாமி ஆகியோர் எனது அப்பா இருந்த காலத்தில் பிரித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிராதில் 2ம் லக்க சொத்தில் வரிசை எண் 2 புலஎண் 172/3க்கு பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அந்த நிலத்தின் பெயர்

மனத்தா என்றால் சரிதான். இந்த சொத்து சம்பந்தமாக மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண் 175/2004 ஆக வழக்கு செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் அழகிச்சிக்கு சாதகமாகவும் எனது தகப்பனாருக்கு பாதகமாகவும் தீர்ப்பாகி உள்ளது என்றால் தெரியாது. அந்த தீர்ப்பை எதிர்த்து எனது தகப்பனார் முதலாவது மேல்முறையீடு தாக்கல் செய்து தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. அதன்பிறகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 2வது மேல்முறையீடு எஸ்ஏஎண் 586/2008 வழக்காக வழக்கு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு விபரங்களை தெரிந்து கொண்டு தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மு.வ எண்175/2004 வழக்கில் 12.04.1988ல் அழகிச்சி, அழகர், கருப்பசாமி ஆகியோருக்கு ஏற்பட்ட பாகவிஸ்தி ஆவணம் வா.சா.ஆ.3 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தீர்வு ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவின் அப்பா மார்க்கண்டேயன் உடன்பிறந்தவர்கள் சூரன்அம்பலம், கரந்தமலை என்றால் சரிதான். மேற்படி மூவருக்குள் 24.07.1984 வருடத்தில் பாக்பிரிவினை ஏற்பட்டு பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல, சூரனுக்கு பிரித்து கொடுக்கவில்லை மற்ற 2 நபர்களுக்கு பிரித்து கொடுத்துள்ளார்கள். அந்த பாகப்பிரிவனை பத்திரம் எனது அப்பவிடம் உள்ளதா என்றால் மார்க்கண்டேயனிடம் இருந்து தற்பொழுது அழகிச்சி கருப்பசாமியிடம் உள்ளது. அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் யார் யாருக்கு இடையில் பாகப்பிரிவினை நடந்தது என்பது தெரியவரும் என்றால் அந்த பத்திரம் என்னிடம் இல்லை எனது தகப்பனாரிடம் உள்ளது. பிராது சொத்து விபரத்தில் 2ம் இலக்கமாக குறிப்பிட்டுள்ள மாங்குடி, மேலராங்கியம் சொத்துக்கள் புலஎண்.183/8. 137/15, 155/18, 116/1ஏ2பி, 72/3பி, 199/1சி மற்றும் 126/4 சொத்துக்களில் 24.7.1984 தேதிய பாகபிரிவனைபடி சூரன்அம்பலத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சூரன்அம்பலம் தனக்கு கிடைத்த சொத்துக்களை சூரன்அம்பலம் 17.6.1996 தேதி பதிவு உயில் சாசனம் மூலம் அழகிச்சி, கருப்பசாமி ஆகியோருக்கு பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. சூரன்அம்பலம் எந்த வருடம் எந்த தேதியில் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. அவர் 2.8.2002ல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சூரன் இறந்தபிறகு அவர் எழுதி வைத்த உயிலின் படி

அதில் கண்ட சொத்துக்கள் 2, 4 பிரதிவாதிகளான அழகிச்சி, கருப்பசாமிக்கு பாத்தியமாகி அவர்கள் தனிதனியாக பிரிவினை செய்து தனித்த பாத்தியத்தில் வைத்து வரிசெலுத்தி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேலே குறிப்பிட்டள்ள சொத்துகள் உயில் மூலம் 2, 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியமாகி விட்டதால் அழகருக்கு எந்த பாத்தியமும் ஏற்படவில்லை என்றும், அதை இந்த வழக்கில் தேவையில்லாமல் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் கண்டுள்ள சொத்துக்களில் கூட்டு பாத்தியமும், அனுபவமும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் 4ம்வகுப்பு வரை படித்துள்ளேன். எனது பிறந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள 72/3பி, 155எ18 2லக்க சொத்துக்களிலும் கரந்தைமலைக்கு 3ல் 1 பாகம் பங்கு உள்ளது என்றால் சரியல்ல, 2ல் 1 பாகம் அவரிடம் உள்ளது. வழக்கு சொத்து விபரத்தில் கரந்தமலையின் 2ல் 1 பாகத்தை விலக்கி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அவ்வாறு விலக்கி கரந்தைமலையை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மார்க்கண்டேயனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் 11 வரிசை எண் சொத்துக்களில் கரந்தைமலையின் பாகத்தை விலக்கி சொல்லவில்லை என்றால் சரியல்ல. விலக்கிதான் சொல்லியுள்ளேன். 12.4.1988 தேதிய பாகவிஸ்தி படி மார்க்கண்டேயன், ராக்கமாள் இருவரின் சொத்துக்கள் பிரிவினை செய்யப்பட்டு எனது தகப்பனாருக்கு கிடைத்த சொத்துக்களை எனது தகப்பனாரும் அழகிச்சியும், கருப்பசாமியும் அவர்களுக்கு கிடைத்த் பாகச் சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், ஆனால் கராராக பிரித்து அனுபவிக்கவில்லை. பாகவிஸ்திபடி மூவரும் தனித்தனியாக பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண் 172/3, 3 தலையாக உள்ளதில் எனது தகப்பனார் 3வதாக உள்ள அழகிச்சிக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு செல்லும் வாய்க்காலை அழித்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது தந்தை வாய்க்காலை அழித்து அழகிச்சியை விவசாயம் செய்யவிடாமல் தடுத்ததற்காக மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.175/2004 வழக்கு நடந்தது என்றால் சரியல்ல. வாய்க்கால் சம்பந்தமாக வழக்கு நடந்த விபரம் எனக்கு தெரியாது. பிராது சொத்து விபரத்தில் 2வது லக்கத்தில் மேலராங்கியம் கிராமத்தில் 14வது வரிசை எண்ணாக கண்டுள்ள புலஎண் 149/13பி சொத்து மேலராங்கியம் கிராமத்தில் ராமன்அம்பலம் என்பவருக்கு

பாத்தியமாக உள்ளது என்றால் சரியல்ல. மார்க்கண்டேயனுக்கு பாத்தியப்பட்து. மார்ககண்டேயனுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, பட்டா தாக்கல் செய்துள்ளேன். ராமன்அம்பலம் இறந்து விட்டார் என்றால் சரிதான். ராமன்அம்பலத்தின் வாரிசுகளின் பாத்திய அனுபவத்தில் தான் புலஎண் 149/எ13பி உள்ளது என்று சொன்னால் சரியல்ல, கிரையபத்திரம் செய்து அழகிச்சியிடம் உள்ளது. மேற்படி கிரையபத்திரத்திற்கு வழக்கு தாக்கல் செய்வதற்காக நகலை நான் எடுக்கவில்லை. அம்பலத்தடி கிராமத்தில் உள்ள புலஎண் 198/3 மேட்டுக்குண்டு நிலம் 3.9.1997ல் சி.வி.கிருஸ்ணஅய்யர் என்பவரின் சொத்து என்றால் சரிதான். கிருஸ்ணஅய்யர் 3.9.1997ல் பதிவு கிரைய பத்திரம் மூலம் 2, 4 பிரதிவாதிகளிடம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த கிரையம் மார்க்கண்டேயன் பெயரில் உள்ளது. மார்க்கண்டேயன் பெயரில் கிரையம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்திற்கு பட்டா அழகிச்சி, கருப்பசாமி பெயரில் உள்ளது என்றால் தற்பொழுது தான் மாறியுள்ளது, அதற்குமுன் மார்ககண்டேயன் பெயரில் இருந்தது. மார்க்கண்டேயன் பெயரில் ஏற்பட்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வேஎண்198.∴.3 கூட்டு குடும்ப சொத்து அல்ல என்றும் அழகச்சி, கருப்பசாமிக்கு தனித்து பாத்தியமான சுயசம்பாத்திய சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தாலுகா பூம்பிடாகை கிராமத்தில் உள்ள சர்வே எண் 203/8 சொத்து மார்க்கண்டேயன் பெயரில் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்து 12.4.1988 தேதிய பாகவிஸ்திக்கு உட்படுத்தப்பட்டு அழகர், கருப்பசாமி, அழகிச்சி மூவருக்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்டு அவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. புலஎண் 22/5ஏ சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி சொத்து யார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் என் அய்யா மார்க்கண்டேயன் பெயரில் வாங்கப்பட்டது ஆகும். மேற்படி சொத்து அழகர், கருப்பசாமி, அழகிச்சி மூவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டு 12.4.1988 ஆம் தேதி பாகவிஸ்திக்கு உட்படுத்தப்பட்டு பிரிவினை செய்து கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை மூவரும் கிரையம் வாங்கவில்லை

மார்க்கண்டேயன் கிரையம் வாங்கியதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, இனிமேல் தான் நகல் எடுத்து பாாக்கவேண்டும். புலஎண் 93/19பி சொத்து மார்க்கண்டேயனுக்கு பாத்தியப்பட்டதா, ராக்கம்மாளுக்கு பாத்தியப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி சொத்தை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, சேர்க்கப்பட்டுள்ளது. 20.11.1971ல் மார்க்கண்டேயன் எனது ஊரில் கருப்பனன் மகன் அழகருக்கு சில சொத்துக்களை வெண்ணிலை கிரையம் ஆவணம் மூலம் கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். மேற்படி சொத்து குடியிருப்பு மனையிடம் என்றால் சரிதான். அதன் சர்வேஎண்கள் 520/2, 520/3, 520/4 ஆகியன என்றால் சரிதான். 520/2, 520/4ல் கருப்பசாமி, குணசேகரன் என்பவரிடம் விற்று விட்டார் என்றால் சரிதான். மேற்படி 3 சர்வே எண்களிலும் 520/4ல் எனது ஓட்டு வீடு உள்ளதுஎன்றால் சரிதான். மேற்சொன்ன 3 சர்வே எண்களையும் இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அழகிச்சி என்பவருக்கு வேறு இடத்தில் மனையிடம் உள்ளது என்றால் மேற்படி 3 சர்வே எண்களுக்கு பக்கத்தில் சின்னத்துரையிடம் மார்க்கண்டேயன் கிரையம் வாங்கிய இடத்தை அழகிச்சிக்கு கொடுத்துவிட்டார். அழகிச்சிக்கு கொடுத்த மனை இடத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. மேற்படி மனையிடத்தையும் தாவா வழக்கு சொத்து விபரத்தில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அழகிச்சிக்கு கொடுத்த மனையிடத்தை அவர் யாருக்கு கொடுத்தார் என்றால் ஒரு பகுதியை கோவிலுக்கு கொடுத்துவிட்டார். அது தொட்டிச்சியம்மன் கோவில். பகுதி இடத்தை அழகிச்சி வைத்துள்ளார். குணசேகரன். தொட்டிச்சியம்மன் கோவில் ஆகியவற்றை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சர்வேஎண்கள் 520/2, 520/3, 520/4 க்கான நத்தம் மனையிடம் 20.11.1971ல் மார்க்கண்டேயன் அம்பலம் கருப்பனன் அம்பலம் மகன் அழகரிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான், அதற்கான பத்திரம் தான் என்னிடம் காட்டப்படும் வெண்ணிலை கிரைய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி <u>வெண்ணிலை கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u> மருதாயி எனது அப்பத்தா ஆவார். மருதாயி புலஎண் 27/1ஏ3 சொத்தை சோனைமுத்து மனைவிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அழகிச்சிக்கு தான் கிரையம் கொடுத்துள்ளார். அழகிச்சிக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தை நகல் எடுத்து

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புலஎண் 27/1ஏ3 சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 12.4.1988 தேதிய பாகவிஸ்தி படி சொத்துக்கள் ஏற்கனவே பிரிவினையாகி தனித்தனியாக அனுபவம் செய்துவரும் விபரம் தெரிந்து கொண்டே இந்த வழக்கில் அதுபற்றி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சூரனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பதிவு உயில் சாசனப்படி 2, 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மருதாயிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மருதாயி 2, 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் அதில் எனக்கு கூட்டு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. ராக்கமாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது பெண்மக்களான நாகம்மாள், அய்யமாளுக்கு பதிவு தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி நாகம்மாள், அய்யமாளின் தனித்த பாத்திய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் கூட்டு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. எனது மனைவி பெயர் மூக்காயி என்றால் எனக்கு மனவை இல்லை. மூக்காயி என்பவர் மேற்படி நாகம்மாள், அய்யாமாளில் யாருடைய மகள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு 2 மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் கண்ணன், கர்ணன் ஆகும். அவர்களின் தாயார் பெயர் தெரியாது. எனது மகன்கள் என்னுடன் இல்லை. மனைவியை பிரிந்து 25 வருடங்கள் ஆகிறது. இந்த வழக்கில் மூக்காயியை 6ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். மூக்காயியின் கணவர் பெயர் கருப்பசாமி என்று குறிப்பிட்டேன் என்றால் சரிதான். எனது மனைவியை 6ம் பிரதிவாதியாக எதற்கு சேர்த்தேன் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் ராக்கமாள் சொத்தை, நாகம்மாள் மூக்காயியிக்கு எழுதிகொடுத்ததால் சேர்த்துள்ளேன். நான் குடும்பத்தை பராமரிக்காமல் மூக்காயியியை கைவிட்டுவிட்டு மூக்காயியியை பழி வாங்குவதற்காக ஏற்கனவே பிரிவினை செய்யப்பட்ட சொத்துக்களையும், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து இவ்வழக்கில் சேர்த்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா

சொத்துக்கள் கூட்டு பாத்தியத்திலும், அனுபவத்திலும் இல்லாததால் தாவா வழக்கில் நான் செலுத்தியுள்ள நீதிமன்றம் கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் ஏதும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை